Date: 07.10.23 S.T.C. No.548 /19

**(Accused present.**

**அ.சா.2 மாதவன் சாட்சி ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டது.) (மேலவளவு நீதிமன்ற காவலர் ஆஜர். )**

**குறுக்கு விசாரணை: (எதிரிதரப்பில்)**

நீங்களும், புகார்தாரர் மலர்விழியும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தற்போதுகூட மலர்விழிதான் உங்களை அழைத்து வந்துள்ளார் என்றால் சரியல்ல. நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். ஒரு விபத்தினை பார்த்தவுடன் யார் காரணம் என்று சொல்லும அளவிற்கு தனி திறமை மற்றும் அதற்கான பட்டப்படிப்பறிவு உங்களுக்கு உள்ளதா என்றால் இல்லை. அதேபோல் இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் தனிப்பிட்டமுறையில் விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தனர். உங்களுடைய முதல் விசாரணையில் நீங்கள் டீ குடிததுக்கொண்டிருந்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றா் சரிதான். எந்த கடையில் டீ குடித்தீர்கள் என்றால குமரேசன் டீ கடையில் டீ குடித்தேன். குமரேசன் டீ கடை பேருந்து நிறுத்தத்திற்கு பக்கத்தில் உள்ளதா அல்லது சற்று தள்ளி உள்ளதா என்றால் முன்னாடி தள்ளி உள்ளது. அந்த கடையிலிருந்துதான் சம்பவத்தை பார்த்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்து கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டுதான் இருந்தது என்றால் சரிதான். மதுரைக்கு செல்லவேண்டுமென்றால் பேருந்து நிறுத்தத்தில் தெற்குபுறம் நிற்கவேண்டும் என்றால் சரிதான். அதேபோல் நீங்கள் டீ கடையிலிருந்து பார்க்கும்போது பேருந்திற்கு பக்கவாட்டில் படிக்கட்டில் ஏறும் நபர்களை பார்க்க முடியாது என்றால் சரிதான். நீங்கள் சொல்வதுபோல் 10, 15 மீட்டருக்கு அப்பால் நின்று பார்க்கும்போது பேருந்து ஓட்டுநர் என்ன செய்தார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நீங்கள் சொல்வதுபோல் சம்பவத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றும், விபத்துள்ளானவர்கள் உங்கள் ஊர்க்காரர் என்பதாலும், விபத்து இழப்பீடு பெறுவதற்காகவும் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றா் சரியல்ல.

ஆஜர் எதிரி வாகனத்தை கவனமாகத்தான் ஓட்டிவந்தார் என்றாலும், பாதிக்கப்பட்ட நபரான மலர்விழியின் கவனக்குறைவினால் விபத்து ஏற்பட்டுவிட்டது என்றும், அதை மறைத்து புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் உங்களை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் காலை 7 மணிக்கு வந்து விசாரணை செய்தார்கள்.

Date: 07.10.23 S.T.C. No.548 /19

**(Accused present.**

**அ.சா.3 சின்னையன் சாட்சி ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டது.) (மேலவளவு நீதிமன்ற காவலர் ஆஜர். )**

**குறுக்கு விசாரணை: (எதிரிதரப்பில்)**

நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் 10வது படித்துள்ளேன். நீங்கள் எத்தனை மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு எத்தனை மணிக்கு வீட்டிற்கு வருவீர்கள் என்றால் காலை 5 மணிக்கு சென்றுவிட்டு ஒருநாளைக்கு மாலை 6 மணிக்கு வருவோம், ஒருநாள் இரவு 10 மணிக்குகூட வருவோம், வேலையை பொறுத்து. சம்பவத்தன்று நீங்கள் வேலைக்கு சென்றுவிட்டீர்கள் என்று சொன்னால் சரிதான். சம்பவத்திற்கு பின்புதான் வேலைக்கு சென்றேன். இந்த வழக்கில் காம்பட்ட அ.சா.1 என் உறவினர் என்றால் சரிதான். தற்சமயம் அ.சா.1 அழைத்துதான் சாட்சியமளிக்க வந்துள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் குமரேசன் டீக்கடையில் டீ குடித்துக்கொண்டு சம்வத்தை பார்த்தீர்கள் என்றால் சரிதான். குமசேரசன் டீ கடை சம்பவ இடத்திற்கு பக்கத்திலிருக்கிறதா, எதிர்திசையலிருக்கிறதா, பின்னால் இருக்கிறதா என்றால் சம்பவ இடத்திற்கு எதிரே உள்ளது. உங்களுக்கு கண்பார்வை சரியாக தெரியாது என்றால் தெரியும். நீங்கள் பார்க்கும்போது பேருந்தானது கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில ்நின்றுகொண்டிருந்தது என்றால் சம்பவம் நடந்து முடிந்து அடிபட்டு இருந்தார். சம்பவம் நடந்து முடிந்தபிறகுதான் நான் பார்த்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் உங்களை விசாரிக்கவில்லை என்றால் விசாரிதனர். போலீசார் எத்தனை மணிக்கு வந்து உங்களை விசாரித்தனர் என்றால் நேரம் ஞாபகமில்லை. நீங்கள் சொன்னதுபோல் சம்பவத்தன்று ஊரிலே இல்லை என்றாலும், மலர்விழி உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து முடிந்து வந்ததால் சம்பவம்பற்றி உங்களால் சொல்ல இயலது என்றால் சரிதான்.

Date: 07.10.23 S.T.C. No.548 /19

**(Accused present.**

**அ.சா.4 ஜெயராணி சாட்சி ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டது.) (மேலவளவு நீதிமன்ற காவலர் ஆஜர். )**

**குறுக்கு விசாரணை: (எதிரிதரப்பில்)**

இந்த வழக்கின் புகார்தாரர் மலர்விழி, அ.சா.2 மாதவன், அ.சா.3 சின்னயைா ஆகியோர்கள் உங்கள் ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று பேருந்து நிறுத்தத்தில் நடந்த சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் நான் பார்த்தேன். நீங்கள் பார்க்கும்போது பேருந்து கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தது என்றால் வேகமாக வந்ததை பார்த்தேன். நீங்கள் சம்பவ இடத்திற்கும் நீங்கள் பார்த்ததற்கு எவ்வளவு தூரத்தில் இருந்தீர்கள் என்றால் 100 மீட்டர் தூரத்தில் இருந்தேன். நீங்கள் பேருந்து நிறுத்ததிற்கு தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு திசையிலிருந்து பார்த்தீர்களா என்றால் பஸ் எந்த பக்கம் இருந்தது என்று எனக்கு தெரியாது. ஆனால் பஸ் முன்பு நான் இருந்தேன், சம்பவத்தை பார்த்தேன். நீங்கள் சொல்வதுபோல் சம்பவ இடத்தில் இல்லை என்றும், அ.சா.1 உங்கள் நாத்தனார் என்பதால் அவருக்கு ஆதரவாக சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரியானவர் வகனத்தை கவனமாகத்தான் ஓட்டிவந்தார் என்றும், சம்பவத்தை நீங்கள் நேரில் பார்க்காத நிலையில் அ.சா.1-க்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றறல் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் உங்களை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் நான் அரசு மருத்துவமனியல் இருந்தபோது போலீசார் விசாரித்தார்கள். எத்தனை நாட்கள் கழித்து போலீசார் வந்து உங்களை விசாரித்தனர் என்றால் சம்பவம் நடந்த அன்று காலை 07.30 மணிக்கு அரசு மருத்துவமனையில் போலீசார் விசாரிததனர். விசாரித்துவிட்டு வெற்று தாளில் கையெழுத்து மட்டும் வாஙகிக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

Date: 07.10.23 S.T.C. No.548 /19

**(Accused present.**

**அ.சா.5 யோகராஜா ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டது.) (மேலவளவு நீதிமன்ற காவலர் ஆஜர். ) குறுக்கு விசாரணை: (எதிரிதரப்பில்)**

நீங்கள் என்ன வேலை பார்க்கிறீர்கள் என்றால் டிரைவர் வேலை பாக்கிறேன். நீங்கள் டிரைவர் வேலை பார்ப்பதனால் டிரைவர்கள் கவனமாகத்தான் இருப்பார்கள் என்றால் சரிதான். அதேபோல் ஒரு வாகனத்தை நிறுத்திவிட்டு அதன்பின்பு இயக்கும்போது அதிவேகமாக இயக்க இயலாது என்றால் சரிதான். சம்பவத்தன்று நீங்கள் வேலைக்கு சென்றுவிட்டீர்கள் என்றால் இல்லை. பேருந்து நிறுத்தத்தில் இருந்தேன். உங்களுடைய போலிஸ் விசாரணையில் நான் தகவல் தெரிந்துதான் வந்தேன் என்று சொல்லியிருந்தால் அது தவறு. சம்பவசமயத்தில் எங்கிருந்தீர்கள், என்ன செய்துகொண்டிருந்தீர்கள் என்றால் குமரேசன் டீ கடயில் நின்றுகொண்டிருந்தேன். சம்பவ இடத்தில் குமரேசன் டீ கடை உள்ளது என்றால் சரிதான். நீங்கள் எவ்வளவு தூரத்திலிருந்து சம்பவத்தை பார்த்தீர்கள் என்றால் 10, 15 மீட்டர் தூரத்திலிருந்து பார்த்தேன். சம்பவ இடத்திற்கு எந்த திசையில் இருந்தீர்கள் என்றால் வடக்குபுறத்தில் நான் இருந்தேன். நீங்கள் 15 மீட்டர் தூரத்திலிருந்ததால் பேருந்தின் ஓட்டுநர் என்ன செய்தார் என்று உங்களால் சொல்ல இயலாது என்றால் சரிதான். கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் பேருந்து நின்றுகொண்டிருந்ததா வந்துகொண்டிருந்ததா என்றால் நின்றுகொண்டிருந்தது. வழக்கின் புகார்தாரர் அ.சா.1 என் மனைவி என்றால் சரிதான். அ.சா.4 என் சகோதரி மற்று சாட்சிகள் என் ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். நீங்கள் சம்பவத்தன்று ஊரிலேயே இல்லை, சம்பவம்பற்றி தெரியாது என்றும், உங்கள் மனைவிக்கு விபத்து இழப்பீடு பெறுவதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. போலீசார் உங்களை தனிப்பிட்டமுறையில் விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தனர். எந்த தேதியில் எங்கு வைத்து எத்தனை மணிநேரம் விசாரித்தனர் என்றால் அன்றையதினமே போலீசார் கிடாரிப்பட்டியில் காலை 8 மணிக்கு விசாரித்தனர். அதன்பின்பு மதுரையில் மருத்துவமனியல் காலை 09.30 மணிமுதல் 10 மணிக்குள் விசாரித்தனர்.

Date: 07.10.23 S.T.C. No.548 /19

**(Accused present.**

**அ.சா.6 குமரேசன் ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டது.) (மேலவளவு நீதிமன்ற காவலர் ஆஜர். ) குறுக்கு விசாரணை: (எதிரிதரப்பில்)**

நீங்கள் டீ கடை வைத்து நடத்தி வருகிறீர்கள் என்று சொன்னால் சரிதான். கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்தத்திலிருந்து உங்களுடைய கடை எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 50 மீட்டருக்குள் இருக்கும். நீங்கள் கடை ஓனரா என்றால் ஆமாம். சம்பவத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். போலீசார் உங்களை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. அ.சா.1 முதல் 5 சாட்கள் உங்கள் ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று உங்களால் சொல்லும் அளவிற்கு தனித்திறமை ஏதும் உங்களுக்கு இல்லை என்றால் சரிதான். விசாரித்துதான் சொல்ல இயலும். சம்பவ இடத்திலிருந்து உங்களுடைய கடை எந்த திசையில் அமைந்துள்ளத ன்றால் 5 மீட்டர் தொலைவில் மேற்கு திசையில ் உள்ளது. உங்கள் கடை திறந்தவெளி கடையா அல்லது ரூமிற்குள் உள்ள கடையா என்றால் செட்டு போடப்பட்டு உள்ள கடையாகும். மேற்படி கடையிலிருந்து வாகன ஓட்டுநர் என்ன செய்கிறார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நீங்கள் சொல்வதுபோல் இந்த விபத்திற்கும், ஓட்டுநருக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது ன்றாலும், புகார்தாரர்தான் வாகனத்திற்குள் வந்து விழுந்துவிட்டார் என்றாலும், அ.சா.1 உங்கள் ஊர்க்காரர் என்பதால் அவர் விபத்து இழப்பீடு பெறுவதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.